பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 12 சனிக்கிழமை (22-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 175

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவ வெளிநாட்டு அறிஞர் குழு முயற்சி!

## மாத இறுதியில் கொழும்பு வந்து புதிய ஜனாதிபதியுடன் பேசுவர்

கொழும்பு, மே 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவும் முன்முயற்சியில் தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர் குழு ஒன்று ஈடுபட உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிஞர் பிரிவைச் சேர்ந்த ஆறுபேர் கொண்ட குழு தனது பணியின் முதற்கட்டமாக இம்மாதம் முப்பத்தோராம் திகதி கொழும்பு வருகிறது.

அந்தக் குழு கொழும்பில் புதிய ஜனாதிபதி விஜேதுங்காவுடனும் மற்றும் உயர்மட்டத் தலைவர்களுடனும் முதலில் பேச்சுவார்த்தை நடத்தும். அதன் பின்னர் ஆசிய, அபிவிருத்தி வங்கியின் அறிஞர் குழுவினர் யாழ்ப்பாணம் செல்லக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டின் பல பகுதிகளில் நேற்று அவ்ரோ நோட்டம்

யாழ். குடாநாட்டில் பல பகுதிகளையும் 'அவ்ரோ' விமானம் நேற்றுக்காலை 11 மணியளவில் வட்டமிட்டு நோட்டமிட்டது.

யாழ் நகர், வலிகாமம், தென்மராட்சி பகுதிகளில் அவ்ரோ வட்டமிட்டு நோட்டமிட்டதும் மக்கள் பதற்றமடைந்தனர்.

நேற்று முன்தினம் ஹெலி வட்டமிட்டு நோட்டமிட்ட பகுதிகளின் மீதே அவ்ரோ நேற்று நோட்டமிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3-5-117-154-162-143-51)

★ தமிழ் நாட்டில்

## புலிகள் நடமாட்டம் பற்றி மத்திய அரசு விசாரணை

சென்னை, மே 22

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் மீண்டும் தலை தூக்கியுள்ளதா என்பது பற்றி மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது-

'கியூ' பிரிவுப் பொலீஸார் இந்தப் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து விட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உட்பட பல காங்கிரஸ் பிரமுகர்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

தி.மு.க. ஆட்சியின் போது இருந்ததை விட விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் அதிகமாகக் காணப்படுவதாக திரு. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

(உ-எ)

## புலிகளின் நடவடிக்கை தமிழகத்தில் கூடவில்லை

### ஜெயலலிதா கூறுகிறார்

சென்னை, மே 22

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்று கூறப்படுவதை தமிழக முதல்வர் ஜெயலலிதா மறுத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தொடர்பான மாநில அரசின் நடவடிக்கைகளில் தொய்வு ஏதும் இல்லை என்றும் அவர் சொன்னார்.

தமிழகம் வந்த இந்தியப் பிரதமர் நரசிம்மராவை சென்னை விமான நிலையத்தில் வைத்து புதுடில்லிக்கு வழியனுப்பிய பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இப்படிச் சொன்னார்.

தமிழக மாநில அரசை மத்திய அரசு கலைத்துவிடும் அபாயம் ஏதும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஷெல் தாக்கு

தென்மராட்சி மே 22

நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் பூநகரி கடற்பரப்பில் நிலைகொண்டிருந்து பீரங்கிப் படகிலிருந்து கிளாலி கரையை நோக்கி ஷெல் வீச்சும் துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இயக்கச்சி முகாம் பகுதியில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் வீச்சு இடம்பெற்றது. (உ-117)

## ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவுக்கு ராவ், சோனியா அஞ்சலி

சென்னை, மே 22

ராஜீவ் காந்தி கொலையுண்டு இரண்டாம் ஆண்டு நினைவு தினமான நேற்று, ராஜீவ் கொலையுண்ட ஸ்ரீ பெரும்புதூரில் நினைவு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

பிரதமர் நரசிம்மராவ், ராஜீவின் துணைவியார் சோனியா, மகன் ராகுல், மகள் பிரியங்கா ஆகியோரும் அஞ்சலி நிகழ்வுகளில் பங்கு பற்றினர்.

பிரதமர் ராவ் அங்கு இடம் பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பயங்கரவாதத்துக்கு எதிரான உறுதிமொழியை ஆயிரக்கணக்கான மக்களுக்குச் செய்து வைத்தார்.

([illegible])

தென் மாகாணம், வடமேல் மாகாணம் இரண்டிலும்

## பெரும்பான்மைப் பலம் இன்றியே ஐ. தே. க. முதல்வர்கள் பதவியேற்பு

கொழும்பு, மே 22

கடந்த திங்களன்று நடைபெற்ற மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் வடமேல் மாகாணம், தென்மாகாணம் ஆகிய இரண்டிலும் ஆளும் ஐ.தே.கவுக்கு அறுதிப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காத போதும் —

அந்த இரு மாகாணங்களினதும் முதலமைச்சர்களாக ஐ.தே.கவின் இரு பிரமுகர்கள் நேற்று பதவியேற்றுக் கொண்டனர்.

காலியில் உள்ள தென் மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து ஆளுநர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரின் முன்னிலையில் தென் மாகாண முதலமைச்சராக எம். எஸ். அமரசிறியும் —

வடமேல் மாகாண ஆளுநர் மேஜர் மொண்டேகு ஜய

[2 ஆம் பக்கம் பார்க்க]

### சந்திரிகா பதவியேற்பு

மேல் மாகாண முதலமைச்சராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க நேற்று பதவியேற்றார்.

மேல் மாகாண ஆளுநர் எஸ். சர்வானந்தாவின் முன்னிலையில் அவரது அலுவலகத்தில் பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது.

(உ-எ-6)

### ஏழாலையில் சூட்டுக்கு சிறுமி காயம்

யாழ்ப்பாணம், மே 22

கட்டுவன் இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி ஏழாலை வடக்கில் சிறுமி ஒருத்தி காயமடைந்தார். நேற்று மாலை 6 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

வீட்டு முற்றத்தில் வேறு இருவருடன் இருந்து கதைத்துக்கொண்டிருந்த இரத்தினசிங்கம் கவிதா (வயது 14) என்ற சிறுமியே காயமடைந்தவராவார். இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

ஐ.தே.க. முதல்வர்கள் பதவியேற்பு:

## ஜனநாயக விரோத செயல்: ஸ்ரீ. ல. சு. க. கண்டனம்

கொழும்பு, மே 22

அறுதிப் பெரும்பான்மையைப் பெறாத கட்சிக்கு முதலமைச்சர் பதவிகளை வழங்கியிருப்பது ஜனநாயக விரோதசெயல் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்திருக்கிறது.

இந்த நடவடிக்கை அரசமைப்புக்கு முரணானது என அரசமைப்பு நிபுணர்கள் குறிப்பிட்டதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

''இவ்வாறு முதல்வர்கள் பதவியேற்க அனுமதித்ததன் மூலம் மாகாணசபை முறைகளில் அரசு புதிய குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

மாகாணசபை முறையை ஒழிப்பதற்கு ஒரு வாய்ப்பான காரணமாக அரசு இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தலாம்'' — இப்படி பிரபல பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் —

மேற்படி முதல்வர்கள் பதவி ஏற்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை நேரில் சந்தித்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார். (உ-6)

சர்வதேச அவதானிகள் அறிக்கை

## மாகாணசபைத் தேர்தல் நீதியாக நடத்தப்பட்டது

### எனினும் அரசு மீது கண்டனம்

கொழும்பு, மே 22

மாகாணசபைத் தேர்தல் நீதியானதாகவும், சுதந்திரமானதாகவும் நடத்தப்பட்டது.

—இவ்வாறு தேர்தலைக் கண்காணிக்க வந்திருந்த சர்வதேச அவதானிகள் குழு தமது பூர்வாங்க அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

அவதானிகள் தமது பூர்வாங்க அறிக்கையை நேற்று தேர்தல் ஆணையாளர் சந்தி

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த நூற்றாண்டின் நிலையில் யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் உரை

வட்டுக்கோட்டை, மே 22

19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க மிஷனரிமார் வந்தபோது இருந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் இப்போது காணப்படுகிறது. மின்விளக்குகள் இல்லை. போக்குவரத்து சாதனங்கள் இல்லை. கொழும்பு செல்வதற்கு மார்க்கம் இல்லை. மாணவர்களுக்கு காகிதாதிகள் இல்லை. அமெரிக்கத் தூதுவர் இவ் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி ''ஹொலிடே இன்'' ஹோட்டலில் நடைபெற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் யாழ்ப்பணக் கல்லூரி அதிபர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசன் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரெறசிற்றா ஷேவர் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கலாநிதி ஜெபநேசன் மேலும் பேசுகையில், எமக்கு போதிய அளவு மண்ணெண்ணெய் அனுப்பப்படவேண்டும். சைக்கிள்களும், சைக்கிள்களுக்கான உதிரிப் பாகங்களும் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பூநகரிப் பாதை திறக்கப்படுவதில் உள்ள தாமதம் நீக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

அமெரிக்கத் தூதுவர் பேசுகையில் ''இலங்கையின் இனப் பிரச்சினை இலங்கை மக்களது பிரச்சினை. இதனை நீங்களே தீர்த்துக் கொள்ள வேண்டும். வேறு யாராவது வந்து தீர்த்து விடுவார்கள் என்று நீங்கள் எதிர் பார்க்கலாகாது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஒவ்வொருவரும் முழு மனதோடு பாடுபட வேண்டும்'' என்றார். (இ-க-161)

## இனப்பிரச்சினைத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அறிஞர் பிரிவு ஒன்று தனியாக உள்ளது. அது தனது உறுப்பு நாடுகளின் அரசியல் பிரச்சினைகளில் சமரசம் செய்து வைப்பதுண்டு

அந்த வகையில் அண்மையில் பிலிப்பீன்ஸின் ஆசிய அபிவிருத்தி வங்கி அறிஞர் குழுவின் முயற்சியால் சமாதான வலயம் ஒன்று உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் ஹொங்கொங்கில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கி அறிஞர் பிரிவின் கருத்தரங்கில் இலங்கை இனப் பிரச்சினை குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டு ஆராயப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும் முன்முயற்சியில் ஈடுபட முடிவாகியது

இம்மாதம் 31 ஆம் திகதி கொழும்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் அறிஞர் குழுவில் சிங்கப்பூர், ஹொங்கொங், பிலிப்பீன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆறு அறிஞர்கள் அங்கம் வகிப்பர்.

பிரஸ்தாப அறிஞர் குழுவினர் புதிய ஜனாதிபதி விஜேதுங்காவுடனும், ஏனைய அரசியல் தலைவர்களுடனும் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்துவர். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக யாழ்ப்பாணம் செல்வார்கள்.

முதற்கட்டப் பேச்சுக்கள் பயனளிக்கும் பட்சத்தில் அவர்கள் அடிக்கடி கொழும்பு வந்து தமது முயற்சியைத் தொடர்வர் என்று தெரியவருகிறது.

அறிஞர் குழுவினர் தமது முதலாவது பேச்சுவார்த்தைகளின் போது பூநகரிப் பகுதியை தயச்குதலற்ற சமாதானப் பிரதேசமாக்குவதுபற்றிய கோரிக்கையையும் அதுகுறித்து அடிப்படை வழி முறைகளையும் அரசாங்கத்திடம் முன்வைப்பார்கள் என்று விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது. (அ-1)

# ஈழ அகதிகளை அனுப்ப இந்தியத் தரப்பில் தாமதம்?

சென்னை, மே 22

தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள 7 ஆயிரம் பேர் தாயகம் திரும்ப ஆகும் செலவுகளை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் ஏற்றுக் கொள்ள முன் வந்தும் அதனை இந்திய அரசு ஏற்கத் தயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய அரசின் இத் தயக்கத்தினால் அந்த 7 ஆயிரம் பேரும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் வேலைகள் காலவரையின்றி தாமதித்துள்ளன.

தமது சொந்தச் செலவில் இரண்டு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி 7 ஆயிரம் அகதிகளையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஐ.நா. அகதிகள் தூதரகம் முன்வந்ததும்—

இது பற்றி மத்திய அரசுக்கு ஐ.நா. தூதரகம் கடந்த மாதம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்ததும் தெரிந்ததே.

இது வரை மத்திய அரசிடம் இருந்து பதில் எதுவும் வரவில்லை என்று டில்லியில் ஐ.நா. தூதரகப் பிரதிநிதி தெரிவித்தார்.

இத் தாமதத்தினால் விரக்தியடைந்துள்ள தமிழ் அகதிகள் தந்திகளையும் கடிதங்களையும் தமக்கு அனுப்பி வருவதாகவும் அவர் கூறினார். (உ-எ)

## பெரும்பான்மைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிர முன்னிலையில் அவரது கொழும்பு அலுவலகத்தில் வைத்து வடமேல் மாகாண முதலமைச்சராக காமினி ஜயவிக்ரம பெரேராவும் பதவியேற்றனர்.

இந்த இரு மாகாண சபைகளிலும் ஐ.தே கவுக்கு கூடிய இடங்கள் கிடைத்த போதும், அக்கட்சியால் தனித்துப் பெரும்பாண்மை பலத்தைப் பெற முடியவில்லை.

எதிரணியான ஜனநாயக தேசிய ஐக்கிய முன்னணியும் ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் கூட்டுச் சேர்ந்து தமக்குள்ள பெரும்பான்மையைக் காட்டி இம் மாகாணங்களில் ஆட்சியை அமைக்கத் திட்டமிட்டிருந்தன.

இது பற்றி சம்பந்தப்பட்ட மாகாண ஆளுநர்களுக்கு அக்கட்சிகள் அறிவித்திருந்தன.

எனினும் அதற்கிடையில்—

ஐ.தே.கவினருக்கு மாகாண முதலமைச்சர் பதவிகளை சம்பந்தப்பட்ட ஆளுநர்கள் வழங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த மாகாணங்களில் ஐ.தே. கவுக்கு பெரும்பான்மைப் பலம் இல்லததால்—

எதிர்க்கட்சியினர் கூட்டுச் சேர்ந்து நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் ஐ.தே.க. முதலமைச்சர்களை பதவிநீக்கி அதன் பின்னர் தாங்கள் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-எ 6)

## பரீட்சை முடிவுகள் அனுப்புமாறு கோரிக்கை

1992 ஆம் ஆண்டு நடந்த ஜி. சீ. ஈ. சாதாரணப் பரீட்சையில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் பெறுபேறுகள் இதுவரை கிடைக்கப் பெறாதவர்களின் முடிவுகளை அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரைக் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பலருக்கு இதுவரை பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்காதது குறித்து முறையிடப்பட்டுள்ளதை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ 5)



## இலவச பாமசி வகுப்பு

எமது சங்கத்தால் நடத்தப்படவிருக்கும் இலவச பாமசி பயிற்சி நெறிக்கு ஆர்வமுள்ளோர் இருபாலாரும் 23-05-1993 காலை 9 மணிக்கு நேரில் வரவும். கல்வித்தகைமை G.C.E. (O/L) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியடைந்தவராக இருக்க வேண்டும்.

தொடர்பு:- வட பிராந்திய
யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்,
இல. 50/45, மருத்துவமனை வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(6202) செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
இலங்கேஸ்வரி குலசேகரம்பிள்ளை

20-05-93 அன்று இறைபதம் எய்திய அன்னாரின் புதல்வன் அங்கஜனுக்காகத் துயருறும்.

(25767) தோழர்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 18 – 06 – 1918

மறைவு: 22 – 04 – 1993

அமரர்

### திருமதி கந்தையா பொன்னம்மா

அன்பால் அறிவால் எங்களை எல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரி

''சிவன் அருள் வாசம்''
தன்னை
களபூமி,
சாரைநகர்.

(25764)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருஷம் வைகாசித் திங்கள் 10 ஆம் நாள் (23-05-93) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை வரும் சுப முகூர்த்த சுப வேளையில்
★ தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் ★

எமது திருநிறை செல்வன்
**கிருஷ்ணகுமார்**
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
**பத்மசோதி**
அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் நடைபெறவிருக்கும் வைபவத்திற்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம்
★ அன்புடன் அழைக்கின்றோம் ★

இரு வீட்டார் அழைப்பு

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

திருமதி அன்னலட்சுமி,
மகன் து. புலேந்திரன் குடும்பத்தினர்,
(கயல் விழி நகைப் பூங்கா)
புதிய வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

திரு. திருமதி வினாயகமூர்த்தி,
மகன் திரு. திருமதி குமரகுரு
''மோகன பவனம்''
சேச் லேன்,
கல்வியங்காடு.

தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை

பிற்பகல் 4 மணியளவில் மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும்.

(25769)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் பற்றி விவரம் வீடு வீடாகச் சேகரிப்பு

## சென்னையில் பொலிஸார் நடவடிக்கை

சென்னை, மே 22

சென்னையில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் குறித்த விவரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வீடு வீடாகச் சென்று தகவல் சேகரிக்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னையில் தற்போது 4ஆயிரத்து 500 இலங்கைத் தமிழர்கள் வசிக்கின்றனர்.

இவர்களில் சிலர் தங்கள் புதிய முகவரிகளைப் பதிவு செய்து கொள்ளவில்லை என்றும்—

இவ்வாறு பதிவு செய்யாது இருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்— சென்னை நகரப் பொலீஸ் ஆணையாளர் தெரிவித்தார். (த-எ)

## பிரேமா கொலையுண்ட இடம்

# துப்புப் பெற முடியாதவாறு துப்புரவு செய்யப்பட்டது ஏன்?

கொழும்பு, மே 22

மேதினமன்று ஜனாதிபதி பிரேமதாச கொலையுண்ட ஆமர் வீதிப் பகுதியை துப்பு ஏதும் கிடைக்க முடியாதவாறு துப்புரவு செய்ததற்காக குற்றப் புலனாய்வுப் பணியகத்தை இரகசியப் பொலீஸ் திணைக்களம் குற்றஞ் சாட்டியுள்ளது.

சாதாரண நடைமுறைக்கு முரணாக குற்றப் புலனாய்வுப் பணியகம் நடந்து கொண்டதாக இரகசிய பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆனால், தாம் மேலிட உத்தரவின்படியே குண்டுத் தாக்குதல் நடந்த இடத்தை துப்புரவு செய்ததாக குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-எ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**பல்கலைக்கழக அனுமதிகள் 1992/93-ம் கல்வியாண்டு**

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் பொருட்டு 1991 ஆகஸ்ட் / 1992 ஏப்ரல் (விசேட) நடைபெற்ற க. பொ. த. (உயர்தர)ப் பரீட்சையில் ஆகக்குறைந்த தேவைகளைத் திருப்தி செய்துள்ள அபேட்சகர்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ரூபா 50/- இனை யாழ் பல்கலைக்கழக நிதியாளர் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை யாழ். பல்கலைக்கழகத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழகத் தேர்வுகளும் அனுமதிகளும் கிளையிலிருந்து கலை, வர்த்தக மாணவர்கள் மே 24ஆம் திகதியும், கணித, விஞ்ஞான மாணவர்கள் மே 25 ஆம் திகதியும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை மாணவர்கள் தங்களது பரீட்சைப் பெறுபேறு, மொத்தப் புள்ளி, தேசிய அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளவும்.

அனுமதி விதிகள் பற்றிய கைந்நூல்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாணவர்கள் தத்தம் பாடசாலைகளில் அக் கைந்நூல்களைப் பார்வையிடலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 10-06-1993 பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் முடிவுத் திகதிக்கு முன்பாக யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

• பதிவாளர்.

(சி-5150)


# பிரதமரின் அலுவலகம் புதிய இடத்தில் இயங்கும்

கொழும்பில் ஜனாதிபதி இடம்பெயர் செயலகம் அமைந்துள்ள பிளவர் வீதி ஸ்ரீமதி பாய கட்டடத்தில் இனி பிரதம மந்திரியின் அலுவலகம் இயங்கும் என அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி இடம்பெயர் சேவை முறையை ரத்துச் செய்வது என்று புதிய ஜனாதிபதி விஜேதுங்க தீர்மானித்துள்ளதைத் தொடர்ந்து, பிரதமரின் அலுவலகம் இக் கட்டடத்துக்கு மாற்றப்படுகின்றது.

பிரதமரின் அலுவலகம் தற்போது பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையின் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது (ஒ-எ)

## ராஜீவ் கொலை வழக்கு சாட்சி:

# நவாஸைக் கைது செய்ய விசேட பொலீஸ் குழு!

சென்னை, மே 22

சென்னை, சைதாப்பேட்டைச் சிறையில் இருந்து தப்பிச் சென்ற ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முக்கிய சாட்சியான சார்ல்ஸ் நவாஸைக் கைது செய்ய விசேட பொலீஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சார்ல்ஸ் நவாஸை வெகு விரைவில் கைது செய்ய முடியும் என்று சென்னை நகரப் பொலீஸ் ஆணையாளர் ஆர். ராஜகோபாலன் நேற்றுக் கூறினார்.

நவாஸ் பற்றிய தகவல் அளிப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்க சிறப்பு புலனாய்வுக் குழுத் தலைவர் திரு. கார்த்திகேயன் ஒப்புக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே, தமிழ்நாடு சிறப்புப் பொலீஸ் பிரிவின் எட்டாவது பட்டாலியனைச் சேர்ந்த தலைமை பொலீஸ் திகாரி ஒருவர் உட்பட 6 பொலீஸார் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது பொலீஸ் திணைக்களம் உள்ளக விசாரணை நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-எ)

## மேல்மாகாண சபையில்

# ஆளுங் கட்சியின் தோல்விக்கு காரணங்கள் பலவாம்

மேல்மாகாண சபையில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்கு பல விஷயங்கள் காரணமாக இருக்கலாம்.

அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு கூறினார்.

ஆளும் கட்சி தோல்வி அடைந்ததற்கு ஒரு விஷயம் காரணமாக இருக்காது. இக் காரணங்கள் குறித்து சிந்திக்க வேண்டும். இது பற்றி கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (த-எ)

# எதிர்க்கட்சி கூட்டு முன்னணிக்கு நிபந்தனையுடனான ஆதரவு

## ஐ. ஐ. தே. மு. வழங்கும்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு நிபந்தனையுடனான ஆதரவை வழங்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி முன்வந்துள்ளது

தென் மாகாணம் மற்றும் மேல் மாகாணம் ஆகியவற்றில் ஆட்சி அமைக்க பொது மக்கள் ஐக்கிய முன்னணி விரும்பினால், வடமேல் மாகாணத்தில் ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைமை வேட்பாளரான திரு. ஜி எம். பிரேமச்சந்திராவை முதலமைச்சராக நியமிக்க வேண்டும் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி நிபந்தனை விதித்துள்ளது. (த-எ)

# தேர்தல் முடிவுகள் பற்றி ஆராயப்படவில்லை

## அமைச்சர் ஹேரத் தகவல்

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் பற்றிய அமைச்சரவையில் ஆராயப்படவில்லை.

அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத் புதன்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் முடிவுகள் பற்றி கட்சி மட்டத்திலேயே ஆராயப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (த-எ)


**LONDON ACCOUNTANCY CLASSES**

**I. A. B.**

FOUND & INTER

ஆரம்பம்: 24 - 05 - 1993

விவரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE,**
14 St. Peter's Lane,
Jaffna

(சி-4765)

**தவறிவிட்டது**

20-05-1993 அன்று கைதடிக்கும், செம்மணிக்கும் இடையில் 95ஸ்ரீ 4617 இலக்க மோட்டார் வாகன பதிவுப் புத்தகம், இன்சூரன்ஸ், ரக்ஸ் ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆரியபவான்,
கைதடிச் சந்தி, கைதடி.

(25756)

உ

மல்லாகம்

**அருள்மிகு பெரியதம்பிரான் தேவஸ்தானம் வருடாந்தப் பெருங் பொங்கல் விழா**

காலம்: 23 - 05 - 1993 ஞாயிற்றுக்கிழமை

★ நிகழ்ச்சிகள் ★

காலை 6-00 மணி பொங்கல்
முற்பகல் 10-00 மணி - விசேட அபிஷேக ஆராதனை
நண்பகல் 1-00 மணி தீக்குளிப்பு

அடியார்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யவும்.

வை. பெரியதம்பி,
பெரியதம்பிரான் உபாசகர்.

மல்லாகம்.
(25753)

**அரசாங்க அறிவித்தல்**

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

**மார்பு நோய் சிகிச்சை நிலையம் இடமாற்றம்**

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, 51 ஆம் இலக்க கட்டடத்தில் அமைந்திருந்த மார்பு நோய் சிகிச்சை நிலையம் இலக்கம் 16, மணிக்கூட்டு வீதி என்ற முகவரிக்கு இடமாற்றப்பட்டுள்ளதை பொது மக்களுக்கு அறியத்தருகிறேன்.

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்.

20 - 05 - 1993

(சி-5151)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ் வெற்று, வகை உறுதிப் பத்திரங்கள் (Deed Forms) விற்பனைக்கு உண்டு. சொற்ப பிரதிகளே கைவசம் உண்டு. ஏ.சி.எஸ் தொகுதி ஸ்தாபனங்கள், 90, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (5930)

அழகிய வெள்ளை நிற ஜப்பனீஸ் ஸ்பிற்ஸ் ஆண் நாய்க் குட்டிகளும், 10 கோழிகள், 20 கோழிகள்வளர்க்கக் கூடிய நல்ல கோழிக் கூடுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (6200)

புத்தம் புதிய Yamaha PSS - 270 Electric Organ உம் (9,500/- புதிய தஞ்சாவூர் வீணையும் (12,000/-) உடன் விற்பனைக்கு உண்டு. P. கோபிநாத், இல.38, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (25752)

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (25494)

## தேவை

மருந்துக் கலவையாளர் தேவை. பயிற்சி இல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மெடிக்கல் சென்ரர், ஆனைக்கோட்டை. (6198)

## இலவச திருமண சேவை

34 வயது, பூரம் மணப்பெண்ணுக்கு வெளிநாடு, உள்நாடு மணமகன் தேவை. சீதனம் உண்டு. சகல மதங்களில் மணமக்களுக்குத் தொடர்பு; ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (257 3)

## ஆண்டு - 5

ஆண்டு-5 (புலமைப் பரிசில்) பரீட்சைக்கான தமிழ், கணித பாடங்களுக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (சி 5156)

## மணமகன் தேவை

இந்து 28 வயது, செவ்வாய்க் குற்றமற்ற, திருவோண நட்சத்திரமுடைய பெண்ணுக்கு ஆசிரியர், வங்கி, தனியார் நிறுவனங்களில் வேலை செய்யும் மணமகன் தேவை. குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். இல. 905, மே/பா, உதயன். (6199)

32, செவ்வாய்க் குற்றமற்ற இந்து ஆசிரியைக்கு கௌரவமான மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். உத்தியோகமற்றவரும் கூட விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (25746)

யாழ். நகர், A/L சித்தியடைந்த இந்துப்பெண்ணுக்கு மணமகன் தேவை வயது 24, ஆயிலியம், உயரம் 5' 5'', உள்நாட்டில், வெளிநாட்டில் பணியாற்றும் பட்டதாரி விரும்பத்தக்கது. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (25745)

25 வயதுடைய சைவசமய, A/L படித்த மணமகளுக்கு தமிழீழத்தில் தொழில் புரியும் உயர்கல்வியும், நற்குணமும், 5' 6'' திற்குக் குறையாத உயரமும் உள்ள மணமகன் தேவை. சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். இல. 903, மே/பா உதயன். (6187)

## பெயர் மாற்றம்

யாழ் நகரைவசிப்பிடமாகக் கொண்ட ''கணேசா'' ஆகிய எனது பெயர் K.V. Kanesalingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K. V. Kanesalingam, 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (25537)

## பயிற்சி வினாத்தாள்கள்

A/L பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல், தூயகணிதம், பிரயோககணித பாடங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (சி 5154)

A/L பொருளியல், வர்த்தகமும் நிதியும், கணக்கியல், அளவையியல், தமிழ், இந்து நாகரிகம், கிறிஸ்தவம், புவியியல், அரசியல், இந்துசமய பாடங்களுக்கான பயிற்சி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம். (சி-5153)

## மாதிரி பயிற்சி வினாத்தாள்

4, 5, 6, 7, 8, 9, 10 O/L வகுப்புகளுக்கான அனைத்துப் பாடங்களுக்குரிய மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் மாதா மாதம் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம். (சி-5155)

## அன்பான் திருமண சேவை

31 வயது, பூராடம் ஆசிரியருக்கு மணப்பெண் தேவை. தொடர்பு ஞாயிறு காலை. சின்னச்சாமிக் குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் மேற்கு வீதி, நல்லூர். (25744)

## நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 22

நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப அலுவலக எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவிருப்பதாக நல்லூர் பிரதேச சபை விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார். (த-5)

யாழ். இந்து மகளிர் கல்லூரி

## பொன் விழா அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு

மேற்படி சீட்டிழுப்பு இன்று (22-05-1993) சனிக் கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

- தலைவர்.

(25749)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம:

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருஷம் வைகாசி மாதம் 10ஆம் திகதி (23-05-1993) ஞாயிற்றுக்கிழமை பகல் 1-44 முதல் 2-30 மணிவரையுள்ள

★ சுபமுகூர்த்த வேளையில் ★

திருநிறைசெல்வன் **குருநாதன்** அவர்களுக்கும்

திருநிறைசெல்வி **தனவதி** அவர்களுக்கும்

யாழ் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் (நாச்சிமார் கோவில்) திருமண மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதரராய் சமுகம் தந்து, மணமக்களை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்;

திருமதி ப. தியாகராசா (பத்தர்),
சகோதரன் தி. இராமநாதன்,
சகோதரன் தி பத்மநாதன்,
65, பெரியதம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு. வி. கதிரேசு (ஆசாரி),
(நயினாதீவு - 5ஆம் வட்டாரம்),
36, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

(6196)

# தேவை

1. அச்சுக் கோர்ப்பாளர் — COMPOSITOR
2. ஒப்பு நோக்குநர் — PROOF READER

இவ்விரு துறைகளிலும் பயிற்சி உடையவர்கள் தமது அனுபவச் சான்றிதழ்களுடன் 24 - 05 - 1993 திங்கட்கிழமை நேரில் சமுகம் தரும்படி கோரப்படுகிறது.

**மாறன் பதிப்பகம்,**
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(25754)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சின்னத்துரை கயிலாயபிள்ளை


இந்து இளைஞர் கலாசார மன்றத்தின் காப்பாளர் திரு. சின்னத்துரை கயிலாயபிள்ளை அவர்கள் அமரத்துவம் அடைந்ததை ஒட்டி, எமது மன்றம் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றது.

அன்னாரது குடும்பத்திற்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

இந்து இளைஞர் கலாசார மன்றம்,
வட்டுக்கோட்டை.

(25757)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வல்லிபுரம் மாணிக்கம்

தோற்றம்: 03 — 06 — 1908

திருநிழல்: 16 — 05 — 1988

திதி: 22 - 05 - 1993

கலங்க வைத்தனை தொட்ட துறைகளை
தூயனாய் எம்முன் வாழ்ந்து காட்டினை,
நலங்கள் நாம்பெற நாளும் உழைத்தனை
நமது கைம்மாறைப் பெறாது மறைந்து நீ
கலங்க வைத்தனை ஐயா உன் நினைவுகள்
காலத்தால் அழியாது எம் நெஞ்சிலே
இலங்கும், எமக்கு நல்வழி காட்டிடும்
இனியனே நீ ஆத்ம சாந்திகொள்!

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி,

(25728)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 22

குடாநாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மூன்று இடங்களில் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில், வலிகாமம், மற்றும் தீவக உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும்—

முற்பகல் 11-30 மணி தொடக்கம் 12-30மணிவரை பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில், பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய உ. அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும்—

பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உ.அ. அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ)

## ஓய்வூதியருக்கு ஜூன் முதல் அலவன்ஸ்

கொழும்பு, மே 22

ஓய்வூதியம் பெறுவோருக்கு அடுத்த மாதம் தொடக்கம் 260 ரூபா வாழ்க்கைச் செலவுப்படியையும் 600 ரூபா படியையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியப் பணிப்பாளர் திரு. டபிள்யு. பியசேன மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது சம்பந்தமான பணிப்புரைகள் சகல பிராந்திய செயலகங்களுக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

(இ)

## திருமணப் பதிவு

உடுவில், மே 22

சுன்னாகம் தெற்கு கலைவாணி சனசமூக நிலையத்தில் வைத்து, இப்பகுதியைச்சேர்ந்த இதுவரை திருமணப்பதிவு செய்து கொள்ளாத சுமார் ஐம்பது தம்பதிகளுக்கு திருமணப்பதிவுக்காரர் திரு. அ. அன்னலிங்கத்தினால் இலவசமாக திருமணப்பதிவு செய்து வைக்கப்பட்டது.

வலிகாமம் தெற்கு சனசமூகநிலையங்களின் சமாசம் இதற்கான ஒழுங்குகளைச் செய்து கொடுத்தது.

வடக்கு - கிழக்கில்

# மீளக் குடியேறுவோருக்கு தொழில் முயற்சிக்கு கடன்

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவும்

கொழும்பு, மே 22

வடக்கு - கிழக்கு பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்படுபவர்களுக்கு கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீளக் குடியமர்த்தப்படுவோர் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்காக இக்கடன் வழங்கப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இத்திட்டம் அமுல் செய்யப்படுகின்றது.

கிராமிய அபிவிருத்தி வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகியன கடனை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

விவசாயம், பால்பண்ணை, கடற்றொழில போன்றவற்றிலும்—

விவசாய பண்ணைகளுக்கான இயந்திர சாதனங்களை உற்பத்தி செய்வதிலும்— இத்தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் ஏற்கனவே குடியமர்த்தப்பட்டுள்ள 415 பேருக்கு இக்கடன் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் பெரும்பாலோர் விவசாய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

[இ-எ]

## தமிழ்மொழி தினவிழா வவுனியாவில்

கொழும்பு, மே 22

அகில இலங்கை தமிழ் மொழித் தினவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 17,18,19ஆம் திகதிகளில் வவுனியாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதி மாணவர்களும் இவ்விழாவில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

[த-எ]

[த-எ]

## நியூசிலாந்தில் சாதனை புரிந்த தமிழ் மாணவி

வெலிங்டன், மே 22

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தமிழ் மாணவி ஒருவர் நியூசிலாந்தில் கணிதத்துறையில பெரும் சாதனையை நிலைநாட்டி உள்ளார்.

நியூசிலாந்தின் நியூபிளிமத் கல்லூரியில் ஏழாம் பாரத்தில் கல்வி பயிலும் செல்வி ஷர்மிளா பாலநாதன் (வயது 16) என்பவரே சாதனை புரிந்த மாணவி ஆவார்.

நியூசிலாந்து ஒலிம்பியட் கணிதப் போட்டியிலேயே இவர் சாதனை புரிந்துள்ளார். நியூபிளிமத் பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு மாணவி ஷர்மிளா பாலநாதன் ஆவார்.

இந்தத் தெரிவினால் 1993 ஜூலை மாதம் துருக்கியில் நடைபெற இருக்கும் சர்வதேச கணித ஒலிம்பியட் போட்டியில் கலந்துகொள்ளும் நியூசிலந்து தேசியக் குழுவில் பங்குபற்றி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பும் அவருக்கு இருப்பதாக நியூசிலாந்து கணித வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நியூபிளிமத் பெண் உயர் பாடசாலையின் கணித ஆசிரியரின் சிபார்சின் பேரில் செல்வி ஷர்மிளா பல கணிதப் போட்டிகளில் பங்குபற்றி பல சிக்கலான கணிதப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்ததால் இம் மாதம் நியூசிலாந்து கிறிஸ்தவ ஆலயத்தில் நடைபெறும் கணிதப் போட்டியாளர் குழுவிலும் இடம்பெறுகின்றார்.

ஷர்மிளாவின் தந்தை பாலநாதன் முன்னர் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் வேலைப்பகுதிப் பொறியியலாளராகப் பணிபுரிந்தவர். ஷர்மிளாவின் தாய்வழிப் பாட்டனார் துரைராசா பெயர் பெற்ற கணக்காளர் ஆவார். ஷர்மிளாவின் சாதனையை நியூசிலாந்துப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் புகழ்ந்து செய்தி வெளியிட்டுள்ளன.

(இ-க-155)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 22

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் ஜி. சீ. ஈ. சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களுக்கான கண்காட்சி ஒன்றை எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடத்தவுள்ளது காலை 8-30 மணிக்கு கண்காட்சி ஆரம்பமாகும்.

காட்சிப் பொருள்களைப் பார்ப்பதற்கு அதிக நேரம் தேவைப்படும் என்பதால் மாணவர்கள் அதற்கேற்றவாறு உணவு மற்றும் ஏனைய ஆயத்தங்களுடன் வருமாறு கண்காட்சிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

[த]

## சுதந்திரக் கட்சியிலிருந்து 2 எம். பிக்கள் நீக்கப்படுவர்?

கொழும்பு, மே 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து இரு எம்.பிக்கள் விலக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

களுத்துறை மாவட்டத்தில் தெரிவான டாக்டர் நெவில் பெர்னாண்டோவும் திலக் கருணாரத்னாவுமே அந்த எம் பிக்கள் ஆவர்.

கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புத் தினசரி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

இவர்கள் இருவரும் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு எதிரான கட்சிக்குள் இருந்து கொண்டு கிளர்ச்சி செய்து வருகின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது

களுத்துறை மாவட்டத்தில் நடந்த மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் திருமதி பண்டாரநாயக்கா இவ்விரு எம். பிக்களையும் பகிரங்கமாகக் கண்டித்து பேசி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

(த-எ)

## முஸ்லிம் காங். தலைவர் கருத்து

கொழும்பு, மே 22

மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடைத்த வாக்குகள் தனித்துவத்தை வலியுறுத்துகின்றன.

காங்கிரஸ் தலைவர் ஏ. எச். எம். அஷ்ரப் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் 11 மாவட்டங்களில் போட்டியிட்டது.

(ஓ-எ)

## கூட்டமாக வந்த தேங்காய் திருடர்!

தென்மராட்சி, மே 22

பத்துக்கும் மேற்பட்டோர் — கூட்டமாக வந்து காவலில் இருந்த இருவரை தாக்கி விட்டு, தென்னந்தோட்டத்தில் புகுந்து தேங்காய்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

அண்மையில் தென்மராட்சியில் முகமாலைப் பகுதி தென்னந்தோட்டம் ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது

இது தொடர்பாக பளை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

[ஓ-117]

## காப்பரண்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினரால் வெளியிடப்படும் "காப்பரண்" "சஞ்சிகையின் மூன்றாவது இதழ் வெளிவந்துவிட்டது.

(இ)

## கால் நடை பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், மே 22

கால் நடை வளர்ப்போருக்கான பயிற்சி நெறி ஒன்றினை எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை நடத்துவதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டு வருகிறது

இந்தப் பயிற்சி நெறி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக யாழ் மாவட்டச் செயலகத்தில் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

கால் நடைப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்களது பெயர் விவரங்களை இன்று சனிக்கிழமைக்கு முன்னதாக யாழ். மாவட்டச் செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(த)


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருஷம் வைகாசி 10 ஆம் நாள் (23 - 05 - 93) ஞாயிற்றுக்கிழமை பகல் 1 - 00 மணி முதல் 2 - 45 மணிக்குள் வரும் சுபமுகூர்த்த சுப நல்வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறைசெல்வன்
**திரிபுரசுந்தரன்**
[தொழில நுட்ப உத்தியோகஸ்தர்
யாழ். மாநகரசபை)
அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**இராஜேஸ்வரி**
அவர்களுக்கும்

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான மண்டபத்தில் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து, மணமக்களை வாழ்த்தி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்;

திரு. திருமதி கனகரத்தினம்
30, ராதா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை

திரு. திருமதி பரமலிங்கம்,
க. தங்கம்மா குடும்பத்தினர்.

★ இரு வீட்டார் அழைப்பு ★

(6201)



## அஸ்ரன் கல்வி நிலையம்

ஆரம்பிக்கும்

**A/L விஞ்ஞானப் பிரிவு - 95**

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்களின்
இணைந்த சேவை

**ஆரம்பம்: 05 - 06 - 1993**

முற்பகல் 8-00 மணி

| | | |
|---|---|---|
| பௌதீகவியல் / பிரயோககணிதம் | — | திரு R. மணியம் |
| விலங்கியல் | — | திரு. S செல்வநாயகம் |
| தூயகணிதம் | — | திரு S ஈஸ்வரதேவன் |
| இரசாயனவியல் | — | திரு. K. ஜெயஈஸ்வரன் |
| தாவரவியல் | — | பிரபல ஆசிரியர் |

★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ ஒவ்வொரு வகுப்பிலும் 100க்குட்பட்ட மாணவர்கள்

உறுதியான கல்வியைப் பெற

**அஸ்ரன் கல்வி நிலையம்**

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)

[சி-4766]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்குக்கு வெளியே இ. தொ. கா. பெரும் சக்தி

## செல்லச்சாமி கூறுகிறார்

கொழும்பு, மே 22

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழும் தமிழர்களின் ஏகப் பிரதிநிதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பதை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன.

இ. தொ. கா. பொதுச் செயலாளரும் ராஜாங்க அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி நாடாளுமன்றத்தில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

மலையகத்திலே எத்தனை தொழிற்சங்கங்கள் இருந்தாலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சொல்வதைத்தான் தோட்டத் தொழிலாளர்கள் கேட்பார்கள் என்பதை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் நிரூபித்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

## ஆதரவற்ற பெண்களுக்கு உதவ கெயர் திட்டம்

யாழ்ப்பாணம், மே 22

வடக்கு-கிழக்கில் உழைப்பாளரை இழந்த ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் மிகப் பெரியதோர் திட்டத்தை ''கெயர் இன்ரர்நாஷனல்'' ஸ்தாபனம் செயற்படுத்தவுள்ளது என்று அறியவருகிறது.

பொலனறுவை, அனுராதபுரம் உட்பட வடக்கு - கிழக்கில் இந்த உதவிக்கென 3கோடி டாலர் (சுமார் 120 கோடி ரூபா) பணத்தை கெயர் ஸ்தாபனம் ஒதுக்கியுள்ளது எனவும் தெரிய வருகின்றது. (இ-க)

## வித்தியானந்தன் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், மே 22

யாழ். பல்கலைக்கழகம் நடத்தும் பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப்பேருரை வரிசையில் முதலாவது உரை எதிர்வரும் 26ஆம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக கல்வி வெளியீட்டுக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் திரு இ முருகையன் பேருரையை நிகழ்த்துவார் ''தமிழில் வழங்கும் எழுத்துப் பெயர்ப்பு முறைகள்'' என்ற பொருளில் ஆய்வுரை அமையும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான பேராசிரியர் சு. வித்தியானந்தன் 1989 இல் காலமானார். அவர் நினைவாக வருடந்தோறும் நினைவுப் பேருரைகளை நடத்த யாழ். பல்கலைக்கழகத்தில் அறக்கொடை நிதியம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (த)

## நாடகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 22

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் ஏற்பாடு செய்துள்ள நாடகக் கருத்தரங்கு எதிர்வரும் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறும். ''அரங்கு ஒரு கல்வி முறைமையாக'' என்ற தலைப்பில் பேராசிரியர் கா. சிவத்தம்பி கருத்துரை வழங்குவார்.

கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை, குழந்தை ம. சண்முகலிங்கம், திரு. க. சிதம்பரநாதன், திருமதி கோகிலா மகேந்திரன், திரு சோ பத்மநாதன், கலாநிதி அ. கனகராஜா, திரு. நா. சுந்தரலிங்கம், திரு. கந்தையா, ஸ்ரீகணேஷன் ஆகியோரும் கருத்துரையாற்றுவர். (த)

## கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவரின் போசாக்கு நிலையில் அபிவிருத்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் போசாக்கு நிலையில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் மந்தமான போசாக்கு நிலை இல்லை என்றும் அங்குள்ள அரச சார்பற்ற நிறுவனமான ''ஒக்ஸ்பாம்'' தெரிவித்துள்ளது.

இங்கு தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதார நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டால் போதுமானதாகும் என்றும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள குழந்தைகள் பள்ளி முன்னிலைப் பிள்ளைகளிடையே ''ஒக்ஸ்பாம்'' நிறுவனம் அண்மையில் மந்த போசாக்கு பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டது.

அந்த ஆய்வு அறிக்கையிலேயே மேற்படி விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் விவரம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (த-162)

## செங்குருதி ஆசிரியர் கொலை

சென்னை, மே 22

தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் செங்குருதி வார இதழின் ஆசிரியர் பக்தவக்சலம் கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாத நபர்களினால் கொல்லப்பட்டார்.

இவ்வாறு பி.ரி ஐ. செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

## நிர்க்கதியான தமிழ்ப் பெண்களுக்கு வாழ்வளிக்கத் திட்டம் வேண்டும்

### ஆய்வுப் பட்டறையில் பேச்சு

யாழ்ப்பாணம், மே 22

கடந்த பத்தாண்டு காலத்தில் ''யுத்த நடவடிக்கைகளால் தமிழ்க் குடும்பங்கள் சீரழிந்துள்ளன. உழைப்பாளரை இழந்த குடும்பப் பெண்கள் வாழ்க்கையில் விரக்தியுறும் அளவுக்குச் சென்றுள்ளனர். நிர்க்கதிக்குள்ளான இப்பெண்களுக்கு நல்லதோர் எதிர்கால வாழ்க்கையை அமைக்க நாம் இந்த ஆய்வுப் பட்டறை மூலம் ஆக்க பூர்வமான திட்டங்களை வகுக்க வேண்டும்.''

கொக்குவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக கலந்துரையாடல் மண்டபத்தில் நடைபெற்ற உழைப்பாளரை இழந்த பெண்களின் புனர்வாழ்விற்கான செயற் திட்டங்களை இனங் காணுதலுக்கான ஆய்வுப் பட்டறையின் ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி மாலினி இவ்வாறு கூறினார்

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் திரு. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆய்வுப் பட்டறையை யாழ் மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

செல்வி மாலினி தொடர்ந்து பேசுகையில், எமது பெண்களிற் 'பலர் தமது குழந்தைகளுக்கு ஒரு நேர உணவைக் கூடக் கொடுக்க முடியாமற் திண்டாடுகின்றனர். உதவிகளைப் பெற்ற பல பெண்கள் கூட அவற்றைச் சரியாகப் பயன்படுத்தி வாழ்க்கையைப் புனரமைக்க முடியவில்லை இதற்குக் காரணம் அவர்களுக்குப் போதிய ஆற்றலும் அறிவும் இன்மையாகும்'' என்று கூறினார்.

திரு. கணேசலிங்கம் தலைமையுரை நிகழ்த்திய போது கூறியதாவது:

''உழைப்பாளரை இழந்த பெண்கள் எனும் போது நாம் விதவைகள் என்று மட்டும் யோசிக்கக் கூடாது. பலதரப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகளைப் பற்றி ஆராய வேண்டும்'' என்றார்.

அகதிகள் புனர்வாழ்வு நிதிய உப தலைவர் திரு. எல். ஆர், முத்தையா, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திரு சி. இளங்கோ, யாழ் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், ஐ. இ சிறுவர் பாதுகாப்பு நிதிய திட்ட அலுவலர் திரு வே. ஜெயராஜசிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

அடுத்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த திரு சொ. யோகநாதன் உழைப்பாளரை இழந்த பெண்களில் உதவி தேவைப்படும் பிரிவினரை முன்னுரிமைப்படுத்துதல் எனும் பிரச்சினையை அறிமுகம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து குழு நிலைக் கலந்துரையாடல நடைபெற்று மாலையில் பொதுக் கலந்துரையாடலும் தொகுப்பும் இடம்பெற்றன.

முதல் நாள் நிகழ்ச்சியின் முடிவாக றெட்பானா திட்ட இணைப்பாளர் திரு. அ சத்தி யோயாத சர்மா முன்னுரிமைப்பட்ட பிரிவுகளில் உதவி வழங்க வேண்டிய பயனாளிகளை இனங்காணுதல் எனும் பிரச்சினையை அறிமுகம் செய்தார். (க)

## எயர்லங்காவுக்கு புதிய பணிப்பாளர் சபை நியமனம்

கொழும்பு மே 22

எயர்லங்காவுக்கு புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சேபால ஆட்டிக்கல இச்சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக நிதி அமைச்சுச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், இலங்கை வங்கிப் பொது முகாமையாளர் ரோஹினி நாணயக்காரா, பிரதமரின் செயலாளர் கே, எம் அபயசிங்கா ஆகியோர் இருப்பார்கள் என்று அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-எ)

## ராஜினாமா

கொழும்பு, மே 22

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. எல். கல்பஹேவ நேற்று முன் தினம் தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். [த-எ]


தவில் மேதை

**என். ஆர். சின்னராசா**

அவர்களின்

**ஞாபகார்த்த**

**தங்கப்பதக்க பரிசுப் போட்டி**

மேற்படி போட்டி 26 - 06 - 1993, 27 - 06 - 1993 ஆகிய தினங்களில் இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில், சங்கீத [வாய்ப்பாட்டு] மாணவர்களிடையே மூன்று பிரிவுகளாக நடத்தப்பெறும்.

ஆரம்ப பிரிவு: — 13 வயதிற்குட்பட்டோர்
மத்திய பிரிவு: — 16 வயதிற்குட்பட்டோர்
மேற்பிரிவு: — 21 வயதிற்குட்பட்டோர்

விண்ணப்ப முடிவு திகதி:- 15 — 06 — 1993

★ விண்ணப்பப் படிவங்களுக்கும் மேலதிக விவரங்களுக்கும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

அண்ணா தொழிலகம், இல. 04, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர், இளந்தொண்டர் சபை, இணுவில்கந்தசாமி கோவில், இணுவில்.

(25759)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 26 — 05 — 1926



உதிர்வு: 23 — 04 — 1993

### அமரர் இளையதம்பி நல்லையா

ஆறாத்துயரில் எம்மை மூழ்க வைத்து, மீளாத் துயில் கொண்ட தெய்வமே! பாசம் தனைப் பொழிந்து நேசம் தனை வளர்த்து, குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்தும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையும், சபீண்டீகரணமும் இன்று (22 - 05 - 1993) சனிக்கிழமை இல. 29, அச்சுக்கூட லேன், கொக்குவில் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் குடும்பத்தினர், சகோதரர்கள்.

ந. ஸ்ரீரங்கதாசன், கொக்குவில் கிழக்கு.

(25760)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசமைப்பை மாற்றும் முயற்சி (1)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து, 1978ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்தது போல நாடாளுமன்ற ஆட்சி முறையைக் கொண்டு வருவதற்குப் புதிய ஜனாதிபதி விரும்புகிறார். அதற்கு ஏதுவாக நடைமுறையில் உள்ள அரசமைப்பை மாற்றுவதற்கான வழிமுறைகளை அவர் பரிசீலனை செய்து வருகிறார் — இவை பிந்திய தகவல்கள்.

அரசமைப்பை மாற்றுவதில் தமக்குள்ள அக்கறையையும் கரிசனையையும் பிரதிபலிக்கும் விதத்தில் அரசமைப்புத் துறைக்கெனத் தனியாக ஓர் அமைச்சரையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்றவுடனேயே அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் ஜனாதிபதியின் கையில் குவிக்கப்பட்டிருப்பதைத் தாம் விரும்பவில்லை என்று திரு விஜேதுங்கா தெரிவித்திருந்தார். நாடாளுமன்ற ஆட்சி முறையை மீண்டும் கொண்டு வருவதில் தமக்கு ஆட்சேபம் இல்லை என்றவாறும் அவரது கருத்து அமைந்திருந்தது உண்மை தான். ஆனால் இந்தளவு அவசரமாக அது விடயத்தில் செயலில் இறங்கும் அல்லது செயலில் இறங்குவதாகக் காட்டிக்கொள்ளும் தேவை வந்தது ஏன்?

ஆளுங்கட்சிக்கு மக்கள் ஆதரவு குறைந்திருக்கிறது என்பதை மாகாண சபைத் தேர்தல் துலாம்பரமாக்கியுள்ளது. அத்தோடு மாகாண சபைகள் தொடர்ந்து இயங்கினால் தெற்கில் அரசியல் அமைதியின்மை உருவாகும் என்பதை விஜேதுங்கா முன்னாடியே உணர்கிறார். அது மட்டுமன்றி ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் முறை எதிர்க்கட்சியினர் காத்திரமான, கனதியான மக்கள் எழுச்சியைத் தூண்டக்கூடிய சாத்தியத்தையும் வரு முன்னரே அவர் உணர்ந்துவிட்டார் போலும்!

எனவே தனது உத்தேச இருபத்துமூன்று மாத ஆட்சியையும் நிம்மதியாகத் தொல்லை இல்லாமல் நடத்தி முடிப்பதற்கு அரசமைப்பை மாற்றுவதைத் தவிர அவருக்கு வேறு மாற்று வழியில்லை.

அரசமைப்பை மாற்றுவது என்பது இப்போதைய சூழ்நிலையில் நினைத்தாற் போலச் செய்யக்கூடிய ஒன்றல்ல. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்தால் ஜே. ஆரால் பதவிக்கு வந்த ஏழு மாதங்களில் புதிய அரசமைப்பை அமுலுக்குக் கொண்டுவர முடிந்தது. இப்போது ஆளுங்கட்சிக்கு அந்தப் பலம் இல்லை. வேண்டுமானால் எதிர்க்கட்சிகளையும் சேர்த்துக் கொண்டால் அந்த வசதி இருக்கும்.

எதற்கும் இப்போதைய நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றுவது, பின்னர் மக்களின் அங்கீகாரம் பெறுவதற்குச் சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது என்ற விதிமுறைகளைச் செயலாக்க வேண்டும். மொத்தத்தில் இது ஒரு நீண்ட செயல்முறையாக முடியும். ஆகக் குறைந்தது ஒரு வருடமேனும் இழுக்கும்.

இத்தகைய ஒரு செயல்முறையை, அரசமைப்பை மாற்றுவது என்ற முக்கிய பணியைச் செய்ய விழையும் ஜனாதிபதியும், எதிர்க்கட்சிகளும் இந்த நாட்டின் பிரதான பிரச்சினையாக விளங்கும் இனப்பிரச்சினையையும் தீர்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பமாக இதனை ஆக்கிக்கொள்ளலாம்.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து அவற்றை நிறைவேற்றக்கூடிய விதத்தில் புதிய அரசமைப்பை வகுப்பதற்கு இதனை ஒரு நல்ல வாய்ப்பாக வரித்துக் கொள்ளலாம். அவ்வாறு செய்யின் ஒரு கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்தும் திறமை விஜேதுங்காவுக்கே உண்டு என்ற பெருமை அவரைச் சேரும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு தரக்கூடிய வகையில் புதிய அரசமைப்பு அமையுமானால் நாட்டில் அமைதியையும் ஒற்றுமையையும் உருவாக்க முடியும். அதன்மூலம் அரை நூற்றாண்டு காலப் பிரச்சினையைத் தீர்த்த சரித்திர நாயகனாக விஜேதுங்கா உயரலாம். ஆனால் அவர் அவ்வழி நாடுவாரா? அதற்கான மனமும் துணிவும் உண்டா?

## குமண இன்று திருமலைக்கு

யாழ்ப்பாணம், மே 22

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''குமண'' கப்பல் 40 அரச ஊழியர்களை ஏற்றிக் கொண்டு இன்று திருகோணமலை நோக்கிச் செல்கிறது.

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்புவோரை திருமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு அது நாளை மறுதினம் பருத்தித்துறையை வந்தடையும்.

கொழும்பு செல்லும் அவசர நோயாளர்களை ஏற்றிக் கொண்டு அன்று மாலையே ''குமண'' திருமலை சென்று அங்கிருந்து பின்னர் கொழும்பு திரும்பும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-5-87)

## உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், மே 22

புங்குடுதீவு- நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளில் ஏப்ரல் மாத இரு வாரங்களுக்குரிய நிவாரண இலவச உலர் உணவுப் பொருள்களும், அதே மாதத்தின் கடைசி இரு வாரங்களுக்குரிய உலர் உணவுப் பொருள்களும் இன்றும் நாளையும் விநியோகிக்கப்படும்.

இலவச உலர்உணவு பெறத் தகுதியானோர் இந்த இரண்டு நாட்களிலும் அதனைத் தவறாது பெற்றுக் கொள்ள வேண்டும் என பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (அ)

## கோஷ்டி மோதல் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், மே 22

வாசிகசாலைக்குக் கல்லெறிந்த விடயம் பெரிதாகி கோஷ்டி மோதலில் முடிந்தது. கோஷ்டி மோதல் பொல்லடி, கத்தி வெட்டாகமாறி இருவர் படுகாயமடைந்தனர்.

சுழிபுரம் குடாக்கனை என்னுமிடத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். முத்து தாமரைச்செல்வம் [31 வயது], அரியகுட்டி சந்திரசேகரம் [25 வயது] ஆகிய இருவருமே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆவார்.

இரவு நேரத்தில் வாசிகசாலைக்குக் கல்லெறிந்தவர்களில் இருவரை இன்னொரு கோஷ்டி பிடித்ததாகக் கூறப்படுகிறது. அதனைத் தொடர்ந்த கல்லெறிந்த கோஷ்டிக்கும், பிடித்த கோஷ்டிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு மோதல் மூண்டதாகவும் அதில் சிலர் காயமுற்றனர் என்றும் இருவர் படுகாயமடைந்தனர் என்றும் அறியவருகிறது. (அ-15)

## பல்கலை. விண்ணப்பம் திங்கள் முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 22

1991 ஆகஸ்ட் 1992 ஏப்ரல் (விசேட) ஜி.சீ.ஈ பரீட்சைகளில் தோற்றி பல்கலைக்கழக அனுமதி பெற தகுதி பெற்றவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படவிருக்கின்றன.

1992 - 93 கல்வியாண்டுக்கு அனுமதி பெற தகுதியான மாணவர்கள் தேசிய அடையாள அட்டை, பரீட்சை பெறுபேறுகள், பெற்ற புள்ளிகள் ஆகியவற்றை சமர்பித்து விண்ணப்பப் படிவத்தை பெற்று, பூர்த்திசெய்து அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் ஒப்படைக்க வேண்டும் என்று பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் கேட்டுள்ளார்.

விண்ணப்பப் படிவங்களும், அனுமதி தொடர்பான கைநூலும் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரனால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடம் இருந்து எடுத்துவரப்பட்டுள்ளன. (உ-3)

## பல்கலைக்கழகங்களில் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், மே 22

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல பதவிகளுக்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உதவிப் பதிவாளர், உதவிச் செயலாளர். உதவி நிதியாளர், உதவிக் கணக்காளர், உதவி உள்ளகக் கணக்காளர் ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பட்டதாரிகளும், பல்கலைக் கழகங்களில் சேவையில் உள்ளவர்களும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இந்த பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை அடுத்த மாதம் 12 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவிருக்கிறது.

இதற்கான விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதித் தினம் கடந்த 20 ஆம் திகதியுடன் முடிவடைந்த போதும், மாத முடிவுக்குள் விண்ணப்பங்களை அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## காங்கேசனிலிருந்து 820 தொன் மா வந்தது

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த மாவில் ஒரு தொகுதி — 820 மெற்றிக் தொன் — நேற்று 'மெரினால்' கப்பல் மூலம் பருத்தித் துறைக்கு எடுத்து வரப்பட்டது மாவை இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப் பட்டன.

காங்கேசன்துறையில் பல மாதங்களாக தேங்கிக் கிடந்த — ''கெயர் இன்ரநஷனல்'' நிறுவனத்துக்குரிய — 80 மெற்றிக் தொன் உரமும் மெரினால் கப்பல் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டது. (உ 3-87)

## சிறிமாவைச் சந்திப்பதை ஆளுநர்கள் தவிர்த்தனர்

கொழும்பு, மே 22

தெற்கு மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களை முதலமைச்சர்களாக ஆளுநர்கள் நியமனம் செய்துள்ளமை குறித்து எதிர்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி தனது அதிருப்தியை வெளியிட்டார்.

''இந்த நியமனங்கள் பற்றி நான் ஜனாதிபதி விஜேதுங்காவுடன் பேசினேன். ஆனால் இது பற்றி அந்தந்த மாகாண ஆளுநர்களுடன் பேசும்படி ஜனாதிபதி என்னைக்கேட்டுக் கொண்டார்.

''நான் ஆளுநர்களைக் கண்டு பேச முயன்றேன். ஆனால் ஆளுநர்கள் என்னை சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டனர்.

''மக்கள் எமக்கு வாக்களித்து வெற்றியைத் தந்துள்ளனர். ஆனால் அந்த வெற்றியின் பலாபலன்களை மக்கள் பெறவிடாது அரசு தடுத்து நிற்கிறது''—இவ்வாறு அவர் செய்தியாளர் மாநாட்டில் கூறினார். [உ-எ]

## மாகாணசபைத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரானந்த டி சில்வாவிடம் கையளித்தனர்.

அவதானிகள் குழு தமது அறிக்கையில்—

''தகவல் தொடர்பு சாதனங்கள் மீது அரசு கொண்டிருந்த கட்டுப்பாடு கண்டிக்கத் தக்கது—

''அரசுச் செய்தித்தாள்களும் வானொலியும், டெலிவிஷனும் நடுநிலை நின்று செயலபடத் தவறிவிட்டன—

''தேர்தலுக்கு முந்தி சம்பள உயர்வு பற்றி அரசு வெளியிட்ட அறிவிப்பு வாக்காளரைக் கவரச் செய்யப்பட்ட தவறான நடவடிக்கையாகும்''— என்று தெரிவித்துள்ளனர்.

தமது அறிக்கையை சர்வதேச அவதானிகள் குழு நேற்று பிரதமரிடம் சமர்ப்பித்தது. (உ-எ)

## இன்று

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் கிராம அலுவலர்களுக்கான பயிற்சி நெறி தொகுதி II இன் ஆரம்பவிழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ளது.

o o o

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில நடைபெறும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி:- ஜொலிபோய்ஸ் அணி எதிர் அறிவொளி அணி.

★ 4.30 மணி:- ஞானகலா அணி எதிர் உதயசூரியன் அணி.

o o o

அரியாலை சனசமூக நிலையத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதியாட்டங்கள் இன்று சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

★ காலை 7.30 மணி:- ஜாக்ஸன் ''ஏ'' அணி எதிர் புங்குடுதீவு அம்பாள் அணி.

★ மாலை 4.30 மணி:- அளவெட்டி யுத் ''ஏ'' அணி எதிர் யங் றோயல் அணி.

ஆறு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — ஆறு ஓவர்களைக் கொண்ட — மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியும் சனசமூக நிலைய மைதானத்தில் இன்றும் நாளையும் தொடர்ந்து நடைபெறவிருக்கின்றது.

o o o

''டொனால்ட் கணேஷ குமார்'' கிண்ணத்துக்காக சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்று நாளை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணி மோதும்

மானிப்பாய் பரிஷ், சென்றலைட்ஸ் சொக்ஸ், அணிகளுக்கிடையிலான மற்றைய அரையிறுதியாட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 30 ஆம் திகதி நடைபெறும். இறுதியாட்டம் ஜூன் 6 ஆம் திகதி இடம்பெறும்.

### மாமண்டூரில் தப்பிய

## புலிகள் போராளி கிருபன் இலங்கை சென்றுவிட்டாரா?

சென்னை, மே 22

மதுராந்தகம் அருகே மாமண்டூரில வைத்து அதிரடித் தாக்குதல் நடத்தி தப்பித்துச் சென்ற விடுதலைப்புலிகளில் கிருபனும் மற்றொரு போராளியும் கடல் வழியாக இலங்கைக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலீஸார் நம்புகின்றனர்.

புலியூர் அருகே பொலீஸார் இவர்களை தேடி நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது தப்பியோடிய 5 பேரையும் பொலீஸார் நேருக்கு நேர் எதிர்கொண்டனர் என்றும்—

அப்போது அவர்களில் கிருபன் காணப்படவில்லை என்றும்—

அதனைத் தொடர்ந்தே கிருபனும் மற்றவரும் கடல் மார்க்கமாக இலங்கைக்குத் தப்பிச்சென்றிருக்கலாம் என்ற முடிவுக்கு பொலீஸார் வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த வாரம் பதவியேற்பு

கொழும்பு, மே 22

மத்திய, சப்ரகமுவா மற்றும் வடமத்திய மாகாணங்களின் முதலமைச்சர்கள் அடுத்த வாரமளவில் பதவிப் பிரமாணஞ் செய்து கொள்வார்கள்.

அந்தந்த மாகாணங்களின் ஆளுநர்களை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி இத்தகவலை வெளியிட்டது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னப்பிள்ளை வேதிலிங்கம்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை வேதிலிங்கம் 19 - 05 - 1993 காலை காலமானார். இவர் காலஞ்சென்ற வேதிலிங்கத்தின் அன்பு மனைவியும், திரு. தம்பித்துரையின் (இளைப்பாறிய இ. போ. ச. பரிசோதகர்) அன்புத் தாயாரும், திருமதி தம்பித்துரை வள்ளியம்மாவின் மாமியாரும், திரு. திருமதி தர்மகுலசிங்கம் (பிரான்ஸ்), திரு. திருமதி இத்திரதாஸ் (பிரான்ஸ்), திரு. திருமதி சந்திரதாஸ், திரு. திருமதி ஜெயதாஸ் (பிரான்ஸ்), திரு. குலதாஸ் (கனடா), திருமதி மனோஜா குலதாஸ் (கனடா), செல்வன் சிவதாஸ் (பிரான்ஸ்), செல்வன் செல்வதாஸ் (பிரான்ஸ்), செல்வன் விஜயதாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சதீஷ், ரஜீன், தர்ஷிகா, டனீசன், சுயன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. விஜயதாஸ்,
(பேரன்).

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
[25751]

## திருமதி செல்லையா மாசிலாமணி

திருமதி செல்லையா மாசிலாமணி (ஆசிரியை) 21-05-93 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அதிபர் (அ.மி.த.க. பாடசாலை) க. செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், வாகீசன் (பிரான்ஸ்), கௌதமி, கௌசலா, கௌசிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. சிதம்பரநாதன், சி. பாக்கியநாதன், சி. திருஞானசம்பந்தநாதன் (ஜேர்மனி), மகாதேவன் புஸ்பமலர், இராசசிங்கம் புனிதமலர், தர்மலிங்கம் இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று 22-05-93 சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்

தகவல்:
சி. பாக்கியநாதன்
(அ.ம.ப.நோ கூ.சங் இயக்குநர் சபை உறுப்பினர்)

அளவெட்டி தெற்கு,
கலைநகர்.
(6203)

## செகநாயகம்பிள்ளை வசீகரநாதன்

[உரிமையாளர், வீடியோ வசந்]

புத்தூர் வடக்கைச் சேர்ந்த செ வசீகரநாதன் காலமாகிவிட்டார். இவர் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், மணிமாறன் (ஜேர்மனி), மகேஸ்வரன் (நோர்வே), ரகுநாதன், வசந்தகுமாரி, வசந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிதாஸ், சாவித்திரி, சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேந்தர் சலக்சன், சுரேகா ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (22 - 5 - 93) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி. வ. நாகேஸ்வரி
(மனைவி)

புத்தூர் வடக்கு.
(25761)

## திருமதி துரைசிங்கம் செல்லம்மா

சுன்னாகம் கிழக்கு திருமதி துரைசிங்கம் செல்லம்மா 21 - 5 - 93 இல் காலமானார். இவர் காலம் சென்ற துரைசிங்கத்தின் அன்பு மனைவியும், பாலசிங்கம், திருமதி மல்லிகாதேவி, செல்வராசா, தவராசசிங்கம், ஜெயராசசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இராசகுலசிங்கம், திருமதி பா. மங்களேஸ்வரி, செ. தேவகி (பேபி), த. சியோமதி ஆகியோரின் அன்பு மாமியாருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (22 - 5 - 93) சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. பாலசிங்கம்
[மகன்]
இ. இராசகுலசிங்கம்
[மருமகன்]

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(25770)

## ஆலயங்களில்

குருநகர், மே 22

கோப்பாய் தெற்கு, புனித மரியாள் தேவாலய வருடாந்த நவநாள் திருநாட்கள் இன்று கொடியேற்றத்துடன் ஆரப்பமாகி தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிறு மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் அடுத்த நாள் காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். [உ-51]

o o o

கோப்பாய், நீர்வேலி, உரும்பராய் கிழக்கு, கரந்தன் ஆகிய நான்கு ஊர்களின் மத்தியில் கோவில் கொண்டுள்ள மனோன்மணி அம்பாளுக்கும், சிவபூத நாதேஸ்வரருக்கும் நிகழும் திருக்கல்யாண வைபவம் இன்று காலை 6 மணி முதல் நடைபெறவுள்ளது.

(உ-5)

## நாளை

தமிழ்சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த சோதிட ஆய்வரங்கு நாளை ஞாயிறு மாலை 4 மணிக்கு தமிழ் எழுத்தாளர் பணிமனையில் நடைபெறும். ''திருமண வாழ்வுக்கு செவ்வாய் தோஷம் பாதிப்புண்டா'' என்ற தலைப்பில் ஆய்வரங்கம் இடம் பெறும். (த)

o o o

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கமும் மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையமும் இணைந்து நடத்தும் சிறுவர் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் நடைபெறும். [க-111]

o o o

நீர்வேலி முற்ற வெளி மைதானத்தில் அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டுச் சழக அபிவிருத்தி நிதிக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி நடைபெறவுள்ளது.

(க-110)

o o o

இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ''பிறர்க்கு இன்றுரைத்தானே'' (திருமந்திரம்) என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

[க-18]

## அதிகாரிகள் கலந்துரையாடல

யாழ்ப்பாணம், மே 22

உதவி அரச அதிபர் அலுவலகங்கள் மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த உயர் அதிகாரிகளின் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை மு ப. 10 30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறஉள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள், மாவட்டத் திட்டப் பணிப்பாளர்கள், திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர்கள், பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமநல சேவை உதவி ஆணையாளர்கள், பிரதேச சபை தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், சிறுகைத்தொழில் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், கால்நடைத் திணைக்களப் பணிப்பாளர். மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர்கள், வீதி அதிகார அமைப்புப் பொறியியலாளர்கள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றவேண்டும் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

(அ)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா சிவசுப்பிரமணியம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் நாவலர் வீதி, இல. 595/6 இல் வசித்தவருமாகிய செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்கள் கொழும்பில் 18 - 05 - 93 இல் காலமானார். அன்னார் சிவசோதியின் அன்புக் கணவரும், சுதர்சன், சுகந்தன், சசிதரன், சுகந்தி, ஜெனார்த்தனன், சுகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகராசா, யோகலிங்கம், ராசசிங்கம், திருமதிகள் சகுந்தலாதேவி தியாகராசா, கௌசலாதேவி லிங்கநாதன் ஆகியோரின் சகோதரனும், நமசிவாயம், திருமதி நவமணி பத்மநாதன் ஆகியோரின் மைத்துனரும் மதியழகன். திரு, விமலினி, விஜயலக்ஸ்மி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இத் தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
ச. பத்மநாதன்,

595/6, நாவலர் வீதி,
நல்லூர்.
[25758]

## சின்னத்துரை கயிலாயபிள்ளை J. P.

(இளைப்பாறிய நிர்வாகச் செயலர்,
சுகாதாரத் திணைக்களம்)

வட்டு - மேற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற சின்னத்துரை தம்பதியினரின் மூத்த புதல்வருமாகிய சின்னத்துரை கயிலாயபிள்ளை J. P. (இளைப்பாறிய நிர்வாகச் செயலர், சுகாதாரத் திணைக்களம்) அவர்கள் 20 - 05 - 1993 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திருமதி இராசகிளி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி விஜயராணி (கொழும்பு), திருமதி அன்புமலர், திருமதி அகிலேஸ்வரி, திரு. அன்பேஸ்வரன் (ஜேர்மனி), திரு. அகிலேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. புவனராசசேகரம் (பொறியியலாளர், ஓமான்), திரு. சிதம்பரநாதன் (உதவி முகாமையாளர், லங்கை வங்கி, மானிப்பாய்), திரு. மோகனக்குமரன் (பொது சுகாதாரப் பரிசோதகர், திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. சிவசொரூபநாதபிள்ளை (இளைப்பாறிய உதவி நிருவாக அலுவலர், தபாற் திணைக்களம்), திரு. மணிவாசகம்பிள்ளை (இளைப்பாறிய வான்படை ஆணை அலுவலர்), திருமதி மதிவதனராணி, திருமதி தர்மகுலராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. இலங்கராசசிங்கம் (இளைப்பாறிய உத்தியோகத்தர் சீ நோர் - காரைநகர்]. திரு மங்களேஸ்வரன், திரு. அரியபுத்திரன் [சீ நோர் - யாழ்ப்பாணம்]. திரு. பரமேஸ்வரம்பிள்ளை (ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்), திருமதி நேசம்மா, திரு. கனகபாதசுந்தரம் (இளைப்பாறிய கணக்காளர் - ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபை), திரு. கோணேசவரதன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் - சவூதிஅரேபியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. நடராசா [ஓய்வுபெற்ற கணக்காளர் - இலங்கை சினிமாக் கூட்டுத் தாபனம்] அவர்களின் சகலருமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்;
திருமதி இராசகிளி கயிலாயபிள்ளை.

(சி-5158)

## திருமதி இலங்கேஸ்வரி குலசேகரம்பிள்ளை

அரியாலை திருமதி இலங்கேஸ்வரி குலசேகரம்பிள்ளை 20-5-93 அன்று மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. பொ. குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், அருளினி, தர்மினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), அங்கஜன் (சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற திரு. நமசிவாயம் மற்றும் லீலாவதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரைரெத்தினம், பிரணவநாதன் மற்றும் அன்னலக்ஷ்மி கிருபைராசா (மல்லாகம் நீதிமன்றம்), தேம்பாமலர் பாசுபதன், வனஜா கணேசலிங்கம் (விவசாயப் போதனாசிரியை, வவுனியா), வசந்தகுமாரி செல்வராஜா, மற்றும் செல்வராஜா (Lond.), உருத்திரேஸ்வரன் (Lond.) ஆகியோரின் ஆசைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 2/1, அருளம்பலம் ஒழுங்கை, அரியாலையில் இருக்கும் அவரது இல்லத்திலிருந்து இன்று (22-5-93) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
எஸ். சீ. செல்வராசா
(மக்கள் வங்கி பிரதேசக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்).

(25766)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 05 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org